## புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

( 08-12-2016 – 12-12-2016 )

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 07-12-2016

### கடந்த கால வானிலை 02-12-2016 முதல் 06-12-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 21.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 23-32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 19-23 |
| மேக மூட்டம் | 3-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 44-96 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 8-13 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை 12-12-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 08.12.16 | 09.12.16 | 10.12.16 | 11.12.16 | 12.12.16 |
|---|---|---|---|---|---|
| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் |
| மழை (மி.மீ) | 0.5 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 21 | 21 | 21 | 21 | 21 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 60 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு லேசான மேகமூட்டத்துடன் கூடிய குளிர்ந்த வானிலையே நிலவும். வரும் 8ம் தேதி வியாழக்கிழமை லேசான தூரலுக்கான வாய்ப்பு உள்ளது.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்
### முக்கிய பயிர்கள்: நெல் மற்றும் காய்கறி

- தற்போது நிலவும் மழை மற்றும் பனி மூட்டமான சூழ்நிலை காரணமாக நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. இதனை கட்டுபடுத்த தாவர பூச்சிகொல்லியான அசாடிரக்டீன் 0.03 சதக் கரைசலை ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்கலாம்.
- மிதமான மழையின் காரணமாக மண்ணில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு உரம் மற்றும் நுண்ணூட்டங்களை வைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளலாம்
- மழைக்கால வானிலை நிலவுவதால், காய்கறிப் பயிர்களில் வேர் அழுகல் நோய் தாக்கக்கூடும். இதற்கு பாதிக்கபட்ட இடத்தில் கார்பென்பாசிம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற விகிதத்தில் கலந்து ஊற்ற வேண்டும்.
- மழைகாலங்களில் தங்களது கால்நடைகளை கோமாரிநோய் தாக்குதல் ஏற்படும் மேலும் சப்பைநோய், தொண்டைஅடைப்பான் நோய் ,குடற்புழுக்கள் மற்றும் உருண்டைபுழுக்கள் தாக்குதல் காணப்படும் இதன் காரணமாக மாடுகள், கன்றுகளில் கழிச்சல், வயிற்றுப்போக்கு ஏற்படும், இதனைத்தடுக்க மருத்துவரின் ஆலோசனையின் பேரில் 3 மற்றும் 6 மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழுநீக்கம் செய்யவேண்டும்.